2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 6

## பயிற்சி 3

பெயர் ______________________________


*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

1. **பேச்சுப் பயிற்சி**

உனது குடும்பத்தைப் பற்றிச் சொல்லவும்.

2. **வாசித்தல்**

ராமன் என்ற சிறுவனுக்கு இரண்டு இளைய சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூவரும் ஒரே பள்ளியில் படிக்கிறார்கள். ராமனின் சகோதரர்கள் மிகவும் புத்திசாலிகள். ஒருமுறை அவர்களது பள்ளியில், மின்சாரத்தைப் பற்றி ஓர் உரை நடத்தப்பட்டது. அதில், மின்சாரத்தை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்துவது, மின்சாரத்தைச் சேமிப்பது போன்ற தகவல்கள் விளக்கப்பட்டன. அன்றிலிருந்து ராமனுடைய சகோதரர்கள் மின்சாரத்தை அளவோடு பயன்படுத்தினர். கணினி, தொலைக்காட்சி, வானொலி போன்ற சாதனங்களைப் பயன்படுத்தாதபோது, மின்சாரப் பொத்தான்களை அணைத்தே வைத்திருப்பார்கள். மின்விசிறி, குளிர்சாதனப்பெட்டி போன்றவற்றைத் தேவையான நேரங்களில் பயன்படுத்துவார்கள். ஆனால், ராமன் அவர்களைப் போல செயல்படுவதில்லை. வீட்டுக்கூடத்தில் தொலைக்காட்சியை இயக்கிவிட்டு. அவனது அறையில் வானொலி கேட்டுக்கொண்டே கணினி விளையாட்டுகளை விளையாடுவான். அதனைக் கவனித்த அவனுடைய தந்தை, கோபம் அடைந்தார். அவன் கணினி விளையாட்டு விளையாடுவதைத் தடை செய்தார். எவ்வளவு சூடாக இருந்தாலும் அவனுக்குக் குளிர்சதனத்தைப் பயன்படுத்தும் அனுமதியையும் அவர் வழங்கவில்லை. இவ்வாறு அவனது உரிமைகள் மறுக்கப்பட்டபோதுதான் அவனுக்குப் புத்திவந்து திருந்தினான்.

றெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

# கட்டுரை எழுதுதல்

ஒரு கட்டுரையை எழுதுவதற்கு முன் அதைத் திட்டமிடுதல் அவசியமாகும். **திட்டமிடல்:**

- தலைப்பை ஒட்டிய முக்கிய கருத்துகளை வரிசைப்படுத்துதல் வேண்டும். முக்கிய கருத்துகளுக்கே முதலிடம் கொடுத்து குறிப்புகளைச் சுருக்கமாக எழுத வேண்டும்.
- ஒரே கருத்தை வலியுறுத்தும் கருத்துகளை ஒன்றாக்க வேண்டும்.
- எழுதிய கருத்துகளையே மீண்டும் எழுதாமல் இருக்க வேண்டும்.

கட்டுரை என்பது முன்னுரை, பொருளுரை (கருத்து), முடிவுரை ஆகியவற்றைக் கொண்டது.

**முன்னுரை: (Introduction)**

- எழுத இருக்கும் கருத்தை வகுத்துக் காட்டுவதாக இருக்கவேண்டும்.
- தலைப்பை ஒட்டி சுருக்கமக எழுதவேண்டும்.
- தலைப்பையே திரும்பத் திரும்ப எழுதாமல் அத்தலைப்பை விளக்கி எழுதுதல் வேண்டும்.
- பொருளுரையை (கருத்தை) அறிமுகப்படுத்தும் சொல்லியங்களை எழுதவேண்டும்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**பொருளுரை (கருத்து): (Body)**

- தலைப்பை ஒட்டி எடுத்துக்கொண்ட கருத்தைப் பல வழிகளில் விளக்கிக் கூறும் பகுதி.
- இதைப் பல பந்திகளாகப் பிரித்து அமைக்க வேண்டும்.
- ஒருமைப்பாட்டுடன் ஒரு செய்தியை விளக்க வேண்டும்.
- முதன்மைக் கருத்துகளை விளக்க, ஏற்புடைய எடுத்துக்காட்டுகளை பயன்படுத்தலாம்.

**முடிவுரை: (Conclusion)**

- சொல்லப்பட்ட கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாக அமைய வேண்டும். கருத்துகளை மீண்டும் புகுத்தலாகாது.
- எழுதுபவரின் நிலைப்பாட்டினை வரையறுத்து, படிப்பவர் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வல்லதாக இருக்கவேண்டும்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**3. பின்வரும் தலைப்புக்குப் பொருத்தமாகக் கட்டுரை எழுதவும்.**

## பழங்கள் உண்பதால் விளையும் நன்மைகள்

**திட்டமிடல்**

- பழங்கள் பற்றி... (பழங்களின் பெயர்கள்) - முன்னுரை
- பழங்களைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள் - முன்னுரை
- பழங்கள் உண்பதனால் ஏற்படும் நன்மைகள் - கருத்து
- நீர் விரும்பும் பழங்கள் எது? ஏன்? - கருத்து
- முடிவுரை

முன்னுரை

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

கருத்து

______________________________________________

______________________________________________

______________________________________________

முடிவுரை

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

4. பாடச் சொற்கள்

**பாடம் 1 & 2**

மதிப்பு - Respect
முறைப்பாடு - Complaint
இடர் - Danger / Risk
செப்பம் - Evenness / Smoothly
மானம் - Honour
இலக்கணம் - Grammar
நாகரிகம் - Civilization
வீரம் - Heroism
கொடை - Donation
தளபதி - Commander
நினைவாலயம் - Memorial
தூபி - Memorial Pillar

நீதி - Justice
ஆராட்சி - Research
இன்னல் - Hazard
கோழைத்தனம் - Cowardness
வண்ணத்துப்பூச்சி - Butterfly
அறிவு - Intelligence
இயல்பு - Normal / Character
மாண்பு - Greatness
கொண்டாட்டம் - Celebration
போர் - War
புலால் - Meat
வரட்சி - Drought

**பாடம் 3**

அஞ்சல் - Post
வெப்பநிலை - Weather
உறை - Cover
மாகானம் - State
வாள் - Sword
மாவீரர் - Martyrs

வாளி - Bucket
ஆவல் - Desire
விலங்ககம் - Zoo
இளநீர் - Coconut Water
குதிரை - Horse
துயிலும் இல்லம் - Cemetery

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர்தமிழ் 6

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School